# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 24 /2024

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருவேங்கிடசாமி | Father's/Husband's Name : முத்துரெங்கசாமி | |
| Village | : பொம்மிநாயக்கன்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2025

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** நான் B.A., வரை படித்துள்ளேன். வாதி என்னுடைய மகன் என்றால் சரிதான். நான் அவரின் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண்.1221/1A1 விஸ்தீரணம் 2 ஏக்கர் 26 செண்ட் ஆகும். வழக்குச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா கொண்டசாமி நாயடுவிற்க்கு பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து எனது அப்பா முத்துரங்கசாமி நாயுடு கிரையம் வாங்கி அனுபவித்து வந்த சொத்து என்றால் சரிதான். பட்டா எண்.2635 சர்வே எண்.1121/1ல் 5 ஏக்கர் 74 செண்டை எனது அப்பா கிரையம் வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். ஒரு நபர் மற்றொரு நபருக்கு சொத்தை மாற்றும் வில்லங்கம் பார்த்து தான் வாங்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

2) மேற்படி சொத்தில் 1 ஏக்கர் நிலத்தை 1ம்பிரதிவாதிக்கு எனது தந்தை முத்துரங்கசாமி நாயுடு 05.09.2012ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி பாத்தியப்படுத்தியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மொத்த சொத்தை பொறுத்து நானும் எனது சகோதரர் ரங்கராஜன், செல்வராஜ் மற்றும் சிவக்குமார் ஆகியோர் கடந்த 06.08.2014ம் தேதியில் பாக பிரிவினை பத்திரம் எழுதி கொண்டோம் என்றால் சரிதான். அவ்வறு பாக விஸ்தி செய்யும் போது தாவா சொத்தில் எதுவும் வில்லங்கம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது என்றால் எனது அப்பா சொத்தை தான் பாகம் பிரித்துக்கொண்டோம். 1ம்

பிரதிவாதிக்கு எனது தந்தை எழுதி கொடுத்த 1 ஏக்கர் நிலத்தை தவிர்த்து தான் நாங்கள் பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல, எனது அப்பா எனக்கும் எனது சகோதரர்களுக்கும் சமமாக ஆளுக்கு 2 ஏக்கர் 26 செண்ட் பிரித்துக்கொடுத்து எங்களிடமிருந்து ஆளுக்கு ரூ.5,00,000/–ஆக ரூ.20,00,000/– பெற்றுக்கொண்டார்.

3) இந்த விபரத்தை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேலே சொல்லியுள்ளபடி சமமாக சொத்து பிரிக்கப்படவில்லை என்றாலும் எனக்கும் எனது சகோரர்களுக்கும் ஒருவருக்கு குறைவாகவும், இன்னொருவருக்கு அதிகமாகவும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது மகனுக்கு வா.சா.ஆ.2 ஆவணப்படி எவ்வளவு விஸ்தீரண நிலத்தை எழுதி கொடுத்திருக்கிறேன் என்று கேட்டால் 2 ஏக்கர் 26 செண்ட் ஆகும். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்படும்போதாவது வில்லங்கச் சான்றிதழ் எடுத்து பார்த்திருக்க வேண்டும் என்று சொன்னால் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் வா.சா.ஆ.3 ஆவணம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அதற்கான வில்லங்கச் சான்றிதழை நான் போட்டு பார்த்திருக்கிறேன் என்றாலும் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) எனது தந்தைக்கு தாவா சொத்து சுய சம்பாத்திய சொத்து என்பதால் அதனடிப்படையில் அவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்பதால் அதை பற்றி கேள்வி எழுப்ப எனக்கு எந்த அறுகதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் பிராதில் கோரியுள்ள 2வது பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணப்படி 1ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டது என்றாலும், அவரிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் பிராதில் கோரியுள்ள 1வது பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமாக வருவாய் துறை கிஸ்தி செலுத்தவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொல்லியுள்ளது போல் கிஸ்தி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இல்லாத காரணத்தால் தான் தாவா சொத்து சம்பந்தமாக விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. கூட்டு உரிமையாளருக்கு எதிராக நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிளை கூறி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. வழக்குமூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2014 ம் பாகவிஸ்தி பத்திரம் போடும் போதே 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணம் பற்றி எங்களுக்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 03.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.11.03 17:41:13 +0530

District Munsif,
Aundipatti.